**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 191/2023**

**Deposition of P.W.** 6

Name : ஆல்பா

S/o, D/o, W/o : ராஜன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 22.10.2025

A1 Present. A2 absent. Peittion filed and allowed.

முதல் விசாரணை–

நான் கொல்வேலியில் வசித்து வருகிறேன். புகைப்படகாரராக பணியாற்றி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை பூக்கடையில் வைத்து சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னர் சாயங்காலம் நானும், அனிஷ்–ம் போட்டோம். போலீசார் விசாரித்து கையொப்பம் கேட்டார்கள் கையொப்பம் போட்டோம்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கையெழுத்து போடும் போது சுமார் 05.00 மணி இருக்கும். பூக்கடையை பற்றி எனக்கு நன்றாக தெரியாது என்பதால் எந்த டீ கடையில் டீ குடித்தேன் என்று தெரியாது. நான் போலீசார் செய்ததை சரியாக பார்க்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லாததால் எனக்கு

அங்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல.  அனிஷ் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டார் என்றால் சரியல்ல. அனிஷ் என்னுடன் கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 191/2023**

**Deposition of P.W. 7**

Name : விஷ்னு

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 22.10.2025

A1 Present. A2 absent. Peittion filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் அருவிக்கரையில் வசித்து வருகிறேன். புகைப்பட கருவி விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் சேதமதிப்பு சான்று நான் கொடுத்தது தான். 04.11.2022 தேதி சோனி NX5 கேமராவை போலீசார் என்னிடம் காட்டினார்கள். அந்த கேமரா உடைந்து இருந்தது. அதனை தயார் செய்ய எவ்வளவு தொகை ஆகும் என்று மதிப்பீடு செய்து கொடுத்தேன் அந்த சான்று அ.சா.ஆ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

கேமராவை என் கடைக்கு கொண்டு வரவில்லை. நான் காவல்நிலையம் சென்று பார்த்தேன். 04.11.2022ம் தேதி நான் சான்று கொடுத்தேன். போலீசார் விசாரிக்கும் போது சோனி NX5 கேமராவை ஆய்வு

செய்ததாக நான் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 04.11.2022ம் தேதி  காவல்நிலையத்தில் கேமரா இல்லை என்றும்  அது ஏற்கனவே 22.03.2022ம் தேதியே நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்றால்அது பற்றி எனக்குத் தெரியாது.  தக்கலையில் கேமரா சர்வீஸ் சென்டர்கள் உண்டு.  கேமராவை பார்க்காமலேயே சேதமதிப்பு மதிப்பு சான்று கொடுக்க என்னை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னை போலீசார் சொன்ன தேதியில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் சேதமதிப்பு மட்டும் கேட்டார்கள்.